09-02-2021 அ.வ.எண். 74-2017 பிவாசா.1 சாந்தி **கு.வி.**

நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்திற்கு விபரங்களை நான் தான் சொன்னேன். வாதி தாக்கல் செய்துள்ள பிராதை படித்து பார்த்தேன். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது இடத்திற்கு அருகே உள்ள புறம்போக்கு இடத்தை தனது இடம் என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் கிரயம் வாங்கிய சொத்து சுமார் 10 சென்ட் அளவுடையது. அதில் 4 சென்ட் அளவில் தார்சு வீடு கட்டியுள்ளேன். எனது வீட்டின் முன்பகுதியில் காலியிடம் இல்லை. பின்பகுதியில் சுமார் 6 சென்ட் உள்ள இடம் காலியாக உள்ளது. எனது சொத்தை நான் 1997லேயே கிரயம் பெற்றுவிட்டேன். நான் பட்டா வாங்கிய பின் வீடு கட்டினேனா அல்லது வீடு கட்டிய பின் பட்டா வாங்கினேனா என்றால் 1997லே பட்டா மாறுதல் உத்தரவு வந்துள்ளது. ஆனால் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள நகர கணக்கில் மாறுதல் செய்யவில்லை. 1997க்கான பட்டா மாறுதல் உத்தரவினை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். நான் எனது இடத்திற்கு 2019-ல் தேவகோட்டை தாலுகா அலுவலகத்தில் இருந்து பட்டா பெற்றேன். சிவகங்கை மாவட்ட நகர கணக்குகளில் மாறுதல் செய்யப்பட்டுள்ளதா என்று நான் பார்க்கவில்லை. அது சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாதி வழக்கு தாக்கல் செய்த பின்பு பட்டா பெற்றீர்களா என்றால் பெற்றேன். பட்டா சம்மந்தமான நடவடிக்கைகளை வழக்குக்கு முன்பே கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்தேன். தேவகோட்டை ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் தாவா சொத்தில் வாதி ஆக்கிரமிப்பு செய்திருந்ததை அகற்ற கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வாதி தாவா சொத்து சம்மந்தமாக தேவகோட்டை நகர காவல்நிலையத்தில் என்மீது புகார் கொடுத்த பின்பு தான் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். கோட்டாட்சியர் அலுவலகத்தில் நான் தாக்கல் செய்த மனுவை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இது சம்மந்தமான வழக்கு நிலுவையில் உள்ளதால் அந்த மனுவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் 61. பட்டா எண் கே. பிளாக் 4 ஆகும். தாவா சொத்திற்கான பட்டாவில் தாசில்தார் கையொப்பம் செய்துள்ளார். டவுன் சொத்திற்கு தாசில்தார் பட்டா கொடுப்பாரா என்றால் அது சம்மந்தமாக எனக்கு தெரியாது. எனது கணவருக்கு தான் தெரியும். எனது கணவர் கடந்த 3 வருடமாக வெளிநாட்டில் இருக்கிறார். பட்டாவிற்கு நான் தான் தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்தேன். அந்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. 1997ல் பட்டா மாறுதல் உத்தரவிற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தவிர அதன்பிறகு 2019ல் நான் பெற்ற பட்டா வரை தாவா சொத்திற்கு பட்டா கேட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் 2019ல் சட்டப்படி மனு கொடுத்து பட்டா பெற்றிருந்தால் அந்த மனு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் தெரியவில்லை. மனு கொடுத்து எத்தனை

நாளுக்குள் பட்டா பெற்றேன் என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு பட்டா கொடுத்த வட்டாட்சியரை விசாரித்தால் உண்மைநிலை தெரியவரும் என்றால் சரிதான். நான் 2019ல் வாங்கிய பட்டாவில் 8.5 சென்ட் தான் கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 1.5 சென்ட் நிலத்தை வாதி ஏமாற்றி பெற்றுள்ளார். நான் எனது சொத்திற்கு பட்டா வாங்குவதற்கு முன்பாகவே வாதி தாவா சொத்திற்கு பட்டா வாங்கிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதி எனது சொத்தை ஏமாற்றி பட்டா வாங்கியுள்ளதாக கூறியுள்ளேன். இந்த சங்கதி எனக்கு 2016லேயே தெரியும். 2016ல் முனிசிபல் அலுவலகத்தில் எனது இடத்தை வாதி பட்டா பெற்றுள்ள விபரம் எனக்கு தெரியவந்தது. வாதி பெற்ற பட்டாவை ரத்து செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

கு.வி. தொடர்ச்சி வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் மறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.